21st November 1963]

அருணா சர்க்கரை ஆலை

* 408 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம் பெண்ணாகரத்தில் உள்ள அருணா சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் எப்போது கொடுக்கப்பட்டது?

(இ) அந்தக் கம்பெனியில் Madras State Industrial Finance Corporation எவ்வளவு பணம் முதலீடு போட்டிருக்கின்றது?

(உ) மேற்படி ஆலைக்காக அரசாங்கம் பண உதவி செய் துள்ளதா?

(எ) ஆண்டுகள் பல ஆகியும் சர்க்கரை ஆலை ஆரம்பிக்காத தால் அதற்கு கொடுத்த லைசென்சை ரத்து செய்ய உத்தேச முண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் லைசென்ஸ் வழங்கப்பட்டது.

(இ) Madras Industrial Investment Corpora ion பிரஸ்தாப சர்க்கரை ஆலையில் ரூ. 7,50,000 முதலீடு செய்துள்ளது.

(உ) & (எ) இல்லை.

Drinking water scheme for Rasipuram

* 409 Q.—Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to change the route for laying the pipe line to bring drinking water to Rasipuram from Panamarathupatti ; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : பைப் லைன் அமைக்கும் பாதையை மாற்றியமைக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் வேலை தாமதப்படுகிறது என்று அங்குள்ள அதிகாரிகள் சொன்னார் கள். அமைச்சர் அவர்கள் பதிலில் 'இல்லை' என்று கூறியிருக் கிறார்கள். இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மாதிரி மாற்றி யமைப்பதற்கு எந்த விதமான 'ப்ரொபோசலும்' கிடையாது.

குடிநீர் திட்டம் (விருத்தாசலம் பிர்க்கா)

* 410 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகா தார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) விருத்தாசலம் பிர்க்கா, ஊமங்கலம் பிர்க்கா இவைகளி லுள்ள மேட்டுப்பாங்கான கிராமங்களுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்ய திட்டமுண்டா?

(இ) அப்படியானால், அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(உ) என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes. 30 overhead tanks are proposed to be constructed in the regions of Virudhachalam and Oomangalam Firkas.

(b) Each of the Panchayat Union concerned will have a total provision of Rs. 4 lakhs which has to be utilised on both link roads formation and rural water supply works.

(c) A sum of Rs. 1,51,000 and Rs. 2,19,000 have been spent so far in Virudhachalam Block and Kammapuram Block respectively for this purpose for the last two years.

*411 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் பிர்க்கா, ஊமங்கலம் பிர்க்காவில் குடிதண்ணீர் சப்ளைக்காக எத்தனை ஓவர்ஹெட் டாங்குகள் கட்டப்படும்? எப்போது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Thirty overhead tanks will be constructed. Period and time of construction of overhead tanks depend on the availability of potable water and the successful working of power drills.

கம்போஸ்டு உரம் (திண்டிவனம்)

*412 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகராட்சியில் கம்போஸ்டு உரம் தயார் செய்தது கையாடல் செய்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், எத்தனை டன் உரம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது?

(உ) இதுவரை யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) கையிருப்பு உரத்தில் குறைவு கண்டு பிடிக்கப்பட்டது.

(இ) 385 டன்கள்.

(உ) இல்லை.

திரு. ஆ. தங்கவேலு: கையாடல் செய்யப்பட்ட உரம் 385 டன் அளவுக்கு இருந்தும் இதுவரை அது சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன?